முடிப்பதற்கான முயற்சிகளிலும் அரசு கவனம் செலுத்தி வருகிறது என்கிற காரணத்தால், இது குறித்து விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இசைவு மறுக்கப்படுகிறது.

திரு. அ. ரகுமான்கான் : ரேஷன் கார்டுகள் புதுப்பிக்கப் படுவதற்கு டைம் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதத்தோடு முடிகிற நிலைமை இல்லையென்றால் அதை நீடிக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

3. கவன ஈர்ப்புகள்.

அ. கிளியனூர் அரசு மருத்துவ மனைக் கட்டிடத்தின் மோசமான நிலை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, ''மாயவரம் வட்டம் கிளியனூர் அரசு மருத்துவ மனைக் கட்டிடம் இடிந்து பொது மக்கள் தலையில் விழும் நிலையில் உள்ளதால் பல இடங்களில் முட்டு வைத்து அந்தக் கட்டிடத்திலேயே தொடர்ந்து மருத்துவ மனை நடந்து வருவதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பீதட்ட நிலை குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவப் பணி மற்றும் குடும்ப நல இயக்குனர் அவர்கள் மாயவரம் வட்டம் கிளியனூரில் இருக்கும் அரசு மருந்தகத்திற்கு பழுது பார்ப்பதற்காக ரூ. 78,000 செலவிற்கு அங்கீகாரம் கோரி அரசுக்கு ஒரு செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார். இந்தச் செயற்குறிப்பு பொதுப்பணித்துறை (காவேரி கோட்டம்) செயற் பொறியாளரால் மறு பரிசீலனை செய்யப்படவேண்டியிருக்கிறது. செயற் பொறியாளர் (காவேரி கோட்டம்) இந்த மதிப்பீடு, அரசு கட்டிடங்களை பராமரிப்பதற்

[1980 ஜூலை 15] [டாக்டர் எச். வி. ஹண்டே]

கென்று வரையறுக்கப்பட்டுள்ள விதி முறைகளுக்குள் அடங்கு கிறதா என்று மறுபரிசீலனை செய்து கொண்டிருக்கிறார். இதற் கென்று திருத்திய மதிப்பீடு பெறப்பட்டதும் அதன் தகுதிக்கேற்ப அங்கீகாரம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆகை யால் இந்தச் செயற்குறிப்பு அரசாங்கத்தின் கூர்ந்த (ஆக்டிவ்) கவனத்தில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.10]

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, அந்த கிளியனூர் மருத்துவமனைக் கட்டிடம் இடிந்து பொதுமக்கள் தலையிலே விழக்கூடிய நிலையில் இரண்டாண்டு காலமாக இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் கட்டடத்தின் பல பகுதி களில் இடிந்து விழாமலிருக்க சவுக்குக் கட்டைகள் வைத்து முட்டுக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச் சரவர்கள் கூட ஓராண்டு காலத்திற்கு முன்னால் வந்து அந்தக் கட்டிடத்தை பார்வையிட்டார்கள். கட்டிடம் இடிந்து தலை யிலே விழும் நிலையில் இருக்கிறது. உடனடியாக பழுது பார்க்கப் பட வேண்டுமென்று அப்போது தெரிவித்தார்கள். இப்படி இரண்டாண்டு காலமாக ஒரு மருத்துவமனைக் கட்டிடம் இடிந்து பொதுமக்கள் தலையிலே விழக்கூடிய நிலையில் இருக்கிறது என்று நான் அந்தப்பகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அரசின் கவனத்திற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் கவனத்திற் கும், மாவட்ட மருத்துவ அதிகாரியின் கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறேன். அவர்களும் உடனடியாக பழுதுபார்க்க ஏற் பாடு செய்யப்பட்டிருப்பதாக எனக்கு கடிதம் எழுதியிருக்கிறார் கள். அப்படி அவர்கள் எழுதிய கடிதம் எனக்கு வந்து ஓராண்டுக் காலம் ஆகியும் அந்தக் கட்டிடம் பழுது பார்க்கப்படாமல் இடிந்து பொதுமக்கள் தலையில் விழக்கூடிய நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. அதே கட்டிடத்தில்தான் மருத்துவமனை தொடர்ந்து நடந்து வருகிறது. இனிமேலும் காலதாமதம் ஏற் படாமல், அந்தக் கட்டிடத்தை உடனடியாகப் பழுதுபார்த்து பொதுமக்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படாத வகையில் பாது காப்பு தரப்படுமா என்பதை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர வர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, இந்தப் பிரச்சனையைப் பொறுத்தமட்டில் அரசாங்கம் தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது என்று என்னுடைய அறிக்கை யிலேயே சொல்லியிருக்கிறேன். இதை அந்த டிபார்ட்மெண்டுக்கு அனுப்பி, கிளீயரன்ஸ் வாங்குவதில் கொஞ்சம் காலதாமதம் ஏற் படும். அது கூடாது என்பதற்காக,

to clear this proposal immediately as a special case without insisting on the usual norms prescribed for repairs of Government buildings.

என்று மிகத் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அதற்குக் காரணம், சாதாரணமாக 'நாம்ஸ்' இருக்கிறது; அவைகளைக் கவனிக்காமல் உடனடியாக பழுது பார்ப்பதற்காக எல்லா வகையான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று இந்த இலாகாவுக்கு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசின் தீவிர கவனத்தில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரே. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் இதை சீக்கிரம் பழுது பார்ப்பதற்கு கவனித்துக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். 29–11–79-லே மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்கள் இந்த வேலையைச் செய்வதற்காக 78,000 ரூபாய் அனுமதிக்குமாறு இந்தத் துறையின் இயக்குநருக்கு அனுமதி வழங்க அனுப்பியுள்ளதாக தகவல் தந்துள்ளார்கள். 29-11-79-ல் 78,000 ரூபாய் செலவிடுவதற்கு அனுமதிக்க வேண்டி அரசின் செயலாளருக்கு அது அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பல மாதங்களாக அனுமதி வழங்காமல் இருப்பதற்கு, தாமதம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, சென்ற ஆண்டு நவம்பர் மாதம் 78,000 ரூபாய் செலவழிக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது உண்மைதான். இடையிலே ஏற்பட்ட நிகழ்ச்சிகள் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். 4 மாதங்கள் நம்முடைய ஆட்சி கிடையாது. இப்போது நாங்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் இதிலே மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்தியிருக்கிறோம். அதனால்தான் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல 'யூஷுவல் நார்ம்ஸ்' கவனிக்கப்படாமல் உடனடியாக பழுது பார்க்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இப்போது நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சி பொறுப்பேற்றப் பிறகுதான் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த பதில் நிச்சயமாக மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு மன நிறைவு தரும் என்று நான் கருதுகிறேன்.

3. (ஆ) போரூர் ஒன்றியத்திலுள்ள சில பகுதிகளில் 'கொள்ளை நோயால்' கால்நடைகள் பாதிக்கப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பலராமன் அவர்கள் இருக்கையில் இல்லை. அவர் கொடுத்துள்ள கவன ஈர்ப்புக்குரிய விவர அறிக்கையை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரவர்கள் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,